# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :28 October 2025*
கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
Aran
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**
Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**
Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**
Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்**
**முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2**

**குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்**
**மெ.பேபி நிஷாந்தினி**

**பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்**
**ப.ராம்குமார்**

**புறநானூற்றில் உயிரியல் செய்திகள்**
**எம்ஜிராமச்சந்திரன். வெ**

**புறநானூற்றில் தமிழர் பண்பாடு**
**திருமதி கா.சுகன்யா,**

**செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு**
**இரா.சினேகலதா**

**திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்**
**முனைவர் இரா.ஜெய்சங்கர்**

**திருக்குறளில் மருத்துவச் செய்திகள்**
**முனைவர் சல்மா மஹஜபீன் த. மு**

**திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை**
**க.நித்தியா**

**அபிராமி அந்தாதி - ஒரு பார்வை**
**சா.கஸ்தூரி**

**வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்**
**முனைவர் த. சுபஜா**

**வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை**
**முனைவர்ப.தனஞ்செயன்**

**தெய்வங்களும் கோவில்களும்**
**அ.அறிவுக்கொடி**

**பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்**
**க.கார்த்திகா**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
**முனைவர் த. முத்துலட்சுமி**

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
**கி.தமிழரசி**

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
**ம.கலைச்செல்வன்**

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
**முனைவர் ப. மணிகண்டன்**

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
**முனைவர் அ.புஷ்பா**

**கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
**கு.நிவேதா**

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
**முனைவர் ஈ இசக்கியம்மாள்**

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
**திரு. விசுமாப்போடி சசிகரன்**

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
**முனைவர் வே.இரவி**

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
**முனைவர் அ. மதலேன்**

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
**முனைவர்அ. அமுல்ராஜ்**

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**

**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# தமிழ்

# *Tamil Civilization in Purananooru*

***Ms K. Suganya***, *Ph. D Research Scholar (Part Time) Department of Tamil Studies, Holy cross college (Autonomous), Tiruchirappalli - 02.*

***Dr D.latha,*** *Research Supervisor Department of Tamil Studies, Holy cross college (Autonomous), Tiruchirappalli - 02.*

***Abstract :***

*The Sangam literatures vividly portray the noble qualities that flourished among the kings, poets, and common people who lived during the Sangam period. Purananooru is a work that highlights the spirit of common welfare and the way of life of the rulers who wished not only for their own happiness but also for the prosperity of their people.*

*This ancient text records the bravery, generosity, humanism, water management, sense of unity, balanced way of living, and the cordial relationship between kings and poets. The present study aims to explore and explain the rich cultural values reflected in Purananooru, which captures various historical and social aspects of early Tamil civilization.*

***Keywords: Charity, Humanism, Cultural Refinement, Hospitality, Income, Moderation***

# புறநானூற்றில் தமிழர் பண்பாடு

**திருமதி கா.சுகன்யா,** முனைவர் பட்ட பகுதி நேர ஆய்வாளர்,தமிழ்த்துறை,புனித சிலுவைக் கல்லூரி (தன்னாட்சி)(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)திருச்சிராப்பாள்ளி, 620002.

**முனைவர் தா.லதா**, ஆய்வு நெறியாளர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவைக் கல்லூரி ( தன்னாட்சி),(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) திருச்சிராப்பாள்ளி, 620002.

**ஆய்வுச் சுருக்கம் :**

சங்க இலக்கியங்கள் சங்க காலத்தில் வாழ்ந்து மறைந்த அரசர்கள், புலவர்கள், சாதாரண மக்கள் என்று அனைவரிடமும் மேலோங்கி இருந்த உயர்ந்த பண்புகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது. தான் மட்டுமல்லாது தன் நாட்டு மக்களும் இன்புற்று வாழவேண்டும் என்று நினைத்து வாழ்ந்த மன்னர்களின் பொதுவுடைமைப் பண்பினையும் வாழ்வியல் பதிவுகளையும் எடுத்துக் கூறும் நூல் புறநானூறு ஆகும். பண்டைய மக்களின் வீரம், கொடை, மனிதநேயம், நீர்வள மேம்பாடு, ஒற்றுமை உணர்வு, பகுத்துண்ணும் பாங்கு, அரசர் - புலவர் நட்பு என்று பல்வேறு வரலாற்று நிகழ்வுகளைக் கூறும் புறநானூற்றில் உள்ள பண்பாட்டு விழுமியங்களை எடுத்துரைப்பதே ஆய்வுச் சுருக்கம் ஆகும்.

**திறவுச் சொற்கள்:** கொடை,மனிதநேயம்,பண்படுதல்,விருந்தோம்பல்,வருவாய்,பகுத்துண்ணும் பண்பு

**முன்னுரை:**

சங்க இலக்கிய நூல்கள் தமிழர் வாழ்ந்த வாழ்வை வெளிப்படுத்தும் பெட்டகம் ஆகும். இவற்றுள் அகம்-புறம் என்னும் பகுப்பு முறை தமிழர்களின் செம்மையான வாழ்வியலை எடுத்துக் காட்டுகின்றன. அகவாழ்வைக் காட்டிலும் புறவாழ்வு தமிழுக்கென்ற தனித்துவத்தைப் பறைசாற்றி நிற்கின்றது. எட்டுத்தொகை நூல்களில் புறம் பற்றிய செய்திகளை எடுத்துரைக்கும் புறநானூறு பண்டைத்தமிழரின் பண்பாட்டுக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. மேலும் தமிழ் மன்னர்களின் தலைசிறந்த பண்புகளாம் ஒழுக்கமும், புலவர்களின் பண்பாடுகளாம் தன்மான உணர்வும், பண்டைத்தமிழ் மக்களின் வாழ்வியல் ஒழுங்குகளும், பண்பாடுகளும் பதிவு செய்யப்பெற்று பண்டைத் தமிழரின் பெருமையைப் புறநானூறு மற்ற இனத்தாரும் பிறநாட்டாரும் வியப்புறும் வண்ணம் வெளிப்படுத்துகிறது. புறநானூற்றில் காணலாகும் பண்பாட்டு பதிவுகளைத் தொகுத்துக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பண்பாடு — விளக்கம்:**

பண்பாடு என்பது பண்படுதல் எனும் சொல்லின் வினையடியாகப் பிறந்தது. பண்படுதல், ஒன்றுபடுதல், இசைவு பெறுதல், இசைந்து ஒழுகுதல் போன்ற பொருளைக் குறிக்கிறது. அதாவது பண்படுதலே பண்பாடாகும். “ஒரு முறையான நடத்தை முறைக்கு மக்கள் ஏற்படுத்திக்கொள்ளும் ஒர் அமைப்பு அல்லது மன அளவிலான விதி” எனக் கருத்தியலாளர்கள் பண்பாட்டிற்கு ஒரு பொது விளக்கம் தருகின்றனர்.

**பண்டைத் தமிழரின் வீரம் :**

பண்டைத்தமிழர்கள் பகைவர் நாட்டின் மீது படையெடுக்கப் புறப்படும் முன் தாங்கள் வருவதை முன்கூட்டியே அறிவித்தலும் உண்டு. அவ்வாறு அறிவிக்கும் பொழுது தங்கள் படையெடுப்பால் சாதாரண பொதுமக்கள் உள்ளிட்டோர் துன்பப்படக்கூடாது என்ற உயர்ந்த பண்பாட்டைக் கொண்டிருந்தனர். இதனை,

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்" (புறம் — 9)

என்ற புறநானூற்றுப் பாடல்வழி அறியலாம். மேலும் போர் நெறியிலும் அறநெறியைக் கடைப்பிடித்துப் பசு, பெண்டிர், பார்ப்பனர், பிணியுடையோர், இறந்தவர்க்குச் செய்யவேண்டிய கடன்களைச் செய்தற்குரிய பிள்ளைகளைப் பெறாதவர் ஆகியோரை பாதுகாப்பான இடத்தை அடைவீராக என்று மக்களை எச்சரிக்கும் நோக்கில் மன்னனது பேணும் இயல்பும், கருணை இயல்பும் வெளிப்படுகின்றன.

**நீர் வளம்:**

நாட்டுவளத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள நீர்வளத்தின் இன்றியமையாமையைத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்தும் குடபுலவியனார்,

"உணவுஎனப் படுவது நிலத்தோடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே" (புறம் — 18)

என்ற பாடல் வழி நீர்நிலைகளைப் பெருக்கி நாட்டை வளப்படுத்துவது அரசியலில் அரசனின் தலையாயக் கடமை என்றும், அத்தகைய அரசனே நிலைபெற்ற புகழைப் பெற முடியும் என்றும் அறிவுறுத்தியமை புலனாகிறது.

**ஒற்றுமை உணர்வு :**

ஒற்றுமையாக இருப்பதே பலம் என்பதைப் புலவர், இருவேறு அரசர்கள் ஒருசேர இருந்தமையை நோக்கி இந்த ஒற்றுமை எல்லா நாளும் நீடிக்க வேண்டும் என்று வாழ்த்தியமையை,

"இருவீரும்

உடன்நிலை திரியீர் ஆயின் இமிழ்திரைப்

பௌவம் உறுத்தஇுப் பயம்கெழு மாநிலம்

கையகப் படுவது பொய் ஆகாதே" (புறம் — 58)

என்ற பாடல்வழி அறியலாம். தமிழக மூவேந்தர்கள் ஒருவருக்கொருவர் பகை கொண்டு போரிட்டால் வேற்றுப்புலத்து அரசர்களுக்குத் தமிழகம் ஆளும் இடமாகும் என்பதும் ஒற்றுமையினால் உலகம் வசப்படும் என்பதும் இதன் மூலம் புலனாகின்றது.

**பகுத்துண்ணும் பண்பு:**

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (திருக்குறள் - கொல்லாமை ; 2 )

என்று திருவள்ளுவர் பகிர்ந்து உண்ணும் பண்பினைப் பற்றிக் கூறுகிறார். பழந்தமிழர் பகுத்துண்ணும் பண்பினைப் பெரிதாகப் போற்றினர். கிடைத்தற்கரிய அமிழ்தம் கிடைத்தாலும் தான் மட்டும் உண்ணாமல் அனைவரோடும் பகுத்துண்டார்கள் என்பதை,

"இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும்

இனிதெனத் தமியர் உண்டலும் இலரே" (புறம் — 182)

எனப் புறநானூற்றுப் பாடல் காட்டுகிறது.ஔவையார் அதியமானின் வீரத்தைப் பாராட்டுவதுடன், அவன் எல்லாருக்கும் பகுத்துக்கொடுத்து உண்ணும் இயல்பை உடையவன் என்பதைச் சுட்டுகின்றார்.

"உண்டாயின் பதம் கொடுத்து

இல்லாயின் உடன் உண்ணும்

இல்லோர் ஒக்கல் தலைவன்" (புறம் — 95)

என்ற பாடல்வழி அதியமானின் உயரிய பண்பை ஔவையார் வெளிப்படுத்துகின்றார்.

**தலைவியின் விருந்தோம்பல்:**

முல்லை நிலத்தில் வாழும் தலைவி விருந்தோம்பலில் சிறந்து விளங்கினாள். தன்னை நாடி வந்த பாணர்,கூத்தர் என அனைவருக்கும் மனம் நோகாமல் வரவேற்று உபசரித்து உணவளித்துப் போற்றினாள்.

தான் விளைவித்திருந்த தினையையும்,வரகினையும் அனைவருக்கும் வழங்கினாள் அதனால் "வரகும் தினையும் உள்ளவையெல்லாம் இரவல் மாக்களுக்கு ஈயத் தொலைந்தன" என்று புலவர்கள் வருந்திப் பாடும் நிலை ஏற்பட்டது. இதனால் தினையும் வரகும் தீர்ந்தன. இந்த நிலையில் தலைவியை காண்பதற்கு பாணர் கூட்டம் வந்தது. அவர்களை வரவேற்று உபசரிப்பது தனது கடமை என்பதை உணர்ந்த தலைவி தன்னிடம் தினையும் வரகும் இல்லாத சூழலில் வருந்தாமல் இல்லத்தில் விதைக்காக வைத்திருந்த தினைக்கதிர்களை எடுத்து காலால் மிதித்து தினையினைப் பிரித்து உரலில் இட்டு சமைத்து பசிபோக உணவளித்துப் பாணர்களை உபசரித்து மகிழ்ந்தாள் தலைவி என்பதை,

" தங்கினிர் சென்மோ புலவீர்நன்றும் சென்றதற் கொண்டு மனையோள் விரும்பி வரகும் தினையும் உள்ளவை எல்லாம் குறித்து மாறெதிர்ப்பைப் பெறாது மையிற் குரலுணங்கு விதைத் தினை உரல் வாய்ப் பெய்து சிறிது புறப்பட்டன் நோவிலள்" (புறம் 333-7-13)

என்ற புறநானூற்றுப் பாடல் மூலம் தலைவி விருந்தோம்பல் பண்பில் உயர்ந்து நிற்பதை உணரலாம்.

**கல்வியின் பெருமை :**

மனிதனை மேம்படுத்தவும் நன்னெறியில் செல்ல வைப்பதற்கும் சிறந்த செல்வமாகத் திகழ்வது கல்விச் செல்வமாகும். கல்வி சிறந்த தமிழ்நாடு எனப் பெயர் பெற்ற உயர்நிலைக்குத் தமிழகம் அக்காலத்து மேம்பட்டு விளங்கியது. ஆசிரியருக்குத் துன்பம் வந்தபோது உதவியும், வேண்டிய பொருள் கொடுத்தும், வழிபாட்டு நிலையை வெறுக்காது கற்பது நன்று எனக்கூறும் பாண்டியன் ஆரியப்படைக்கடந்த நெடுஞ்செழியன்,

“ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே” (புறம் — 183)

என்று உலகியலில் கல்வியின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றான். கல்வி உயர்வு தாழ்வினை நீக்குகிறது. அரசனும் கற்றவன் அறிவுரைப்படியே ஒழுகுவான். தன் வயிற்றில் பிறந்த உடன்பிறப்பு கொண்ட பலரில் கற்றவனையே தாயின் மனம் மிகவும் விரும்பும் என்பதை அறியமுடிகிறது.

**வரி வாங்கும் முறை:**

அரசன் தன் நாட்டு வருவாய்க்காக, மக்களிடம் வரிவாங்குதல் முறையேயாயினும், ஒரு சமயத்தில் மக்கள் துன்புறுமாறு வாங்கும் வரிப்பணத்தினால் அரசனுக்குக் கேடு வரும்; மக்களுக்குத் துன்பம் வரும். இதனை அரசன் உணர வேண்டும்.

“பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே” (புறம் — 184)

என்று பாண்டியன் அறிவுடை நம்பிக்குப் பிசிராந்தையார் அறிவுறுத்துகின்றார்.

**செல்வத்துப் பயனே ஈதல்:**

செல்வம் என்பது சிந்தையின் நிறைவாகும். பிறருக்குக் கொடுத்து மகிழும் வாழ்வே சிறப்புடையது. உண்பது நாழி; உடுப்பவை இரண்டே எனக் கூறி,

"செல்வத்துப் பயனே ஈதல்

துய்ப்பேம் எனினே தப்புந பலவே" (புறம் — 189)

என்று நக்கீரனார் பொதுவாக அறிவுறுத்துகின்றார். அறவழியில் பொருளீட்டித் தானும் இன்புற்றுப் பிறர்க்கும் கொடுத்து அவர்களையும் இன்புற்று வாழவகை செய்வதன் மூலம் சங்ககாலத் தமிழர்களின் வாழ்க்கை நிலைகள் மேம்பட்ட தன்மைகளாக விளங்கியமை புலனாகின்றது.

**மனிதநேய மாண்பு :**

பழந்தமிழர்கள் கொண்டிருந்த பண்பாடு மிகவும் உயர்ந்தது. உலக மக்கள் எல்லோராலும் பாராட்டிப் பின்பற்றக்கூடியது. தமிழ் மக்கள் உலகத்தை ஒன்றென்று கருதினர். உலகமக்களை ஒரே குலத்தவராக எண்ணினர். மனிதநேயமே இவ்வுலகிற்கு அவசியம். ஒருமைப்பாடே உயர்வு என்பதைக் கணியன் பூங்குன்றனார் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர்தர வாரா

——————————————————————————

பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" (புறம் — 192)

என்று ஒற்றுமையுணர்வையும், மனிதநேயத்தையும், நன்மையும் தீமையும் நமக்கு நம்மால்தான் வருகிறது என்பதையும் பறைசாற்றுகிறார். இப்பாடல் தமிழர்களின் தனித்த பண்பாட்டை விளக்குவதாக அமைகின்றது.

**முடிவுரை :**

எட்டுத்தொகை நூல்களில் புறநானூறு பண்டைத் தமிழரின் வாழ்வியல் பண்பாட்டை மெய்மையுற விளக்கும் கலங்கரை விளக்கமாகும். மறத்தில் அறமும், நீர்வளம் குறித்த சிந்தனையும், பகுத்துண்ணும் பண்பும், ஒற்றுமை உணர்வும், ஏற்றத்தாழ்வை நீக்கும் கல்வியும், மக்களைத் துன்புறுத்தாது வரிவாங்கும் முறையும், அனைவரையும் ஒன்றாக எண்ணும் மனிதநேயமும் பண்டையத் தமிழரிடையே நிலவியமை புலனாகின்றது. இன்றைய நாகரிக உலகில் சிலர் பண்பாட்டை மறந்தும், இழந்தும் வரும் வேளையில் அவற்றை நினைவுகூர்வது சாலப் பொருந்தும்.

**துணைமை ஆதாரங்கள்:**


1. புறநானூறு மூலமும் உரையும் — ஔவை துரைசாமிப்பிள்ளை, சாரதா பதிப்பகம் - 2015.
2. பண்பாட்டு மானுடவியல் — பக்தவத்சல பாரதி, அடையாளம் பதிப்பகம் - 2019.
3. தமிழர் நாகரிகமும் பண்பாடும் — அ. தட்சிணாமூர்த்தி, வெற்றிச்செல்வி வெளியீட்டகம் - 1973.
4. திருக்குறள் - புலியூர் கேசிகன் உரை - பூம்புகார் பதிப்பகம் - 1986.


## References


1. *Purananooru — Original Text and Commentary — by Ouvai Duraisamipillai, Saradha Publications, 2015.*
2. *Cultural Anthropology — by Bhaktavatsala Bharathi, Adayalam Publications, 2019.*
3. *Tamil Civilization and Culture — by A. Dakshinamurthy, Vettriselvi Publications, 1973.*
4. *Thirukkural — Commentary by Puliyur Kesigan — Poombuhar Publications, 1986.*

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com